விலை சதம் 50 ★ பக்கங்கள் — 10

# ஈழநாடு வார மலர்

THE EELANADU VARAMALAR

மலர் 21 ஆவணி 10 ஷவ்வால் 2 ஞாயிற்றுக்கிழமை (26—8—79) இதழ் 195

உற்சாகத்தை அளிக்கவல்லது
அண்ணா கோப்பி
மின்சார ரேஸ்டரில்
உங்கள் முன்னிலையில் வறுத்து
அரைத்த
அண்ணா கோப்பியை
வேண்டிய அளவுகளில்
பெற்றுக்கொள்ளலாம்.
விஜயம்செய்யுங்கள்
அண்ணா கோப்பிக்கடை
இல. 4, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

மில்க்வைற்
அப்பியாசக் கொப்பி
மாணவமணிகளே!
100 மில்க் வைற் நீல
சோப் அல்லது 10மில்க்
வைற் பார் சோப் அல்
லது10 மில்க்வைற் சல
வைப்பவுடர் அல்லது 10
நீம்சோப்மேலுறைகளை
அனுப்பிமேற்படி அப்பி
யாசக் கொப்பியை
பெற்றுக்கொள்ளுங்கள்
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

UNIVERSITY OF SRI LANKA
RECEIVED
1979 -8 -27
PERIODICALS DIVISION
LIBRARY

# யாழ். பல்கலைக் கழகத்தில் 9 மாணவர்கள் இடை நிறுத்தம்!

## புதிய வைத்திய மாணவரை ‘ருக்கிங்’ செய்தனராம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வளாகத்தில் புதிய வைத்தியபீட மாணவர்களை ‘ருக்கிங்’ செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் விஞ்ஞானபீட மாணவர்கள் பல்கலைக்கழகத்திலிருந்து காலவரையறையின்றி இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

விஞ்ஞானபீடத்தைச் சேர்ந்த இரண்டாம் வருட மாணவர்களே புதிதாக அனுமதிபெற்ற வைத்தியபீட மாணவர்களை மிகவும் மோசமான முறையில் "ருக்கிங்" செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இடை நிறுத்தம் செய்யப்பட்ட மாணவர்களின் பெயர்கள் வருமாறு.

ஆர் சேரன், எஸ் என் ரகுநாதன், என் விஜயபாரதி, சி வாசுதேவா, ஏ தங்கராஜா, கே சிதம்பரநாதன், பி எம் மனோராஜா, என் எம் கலீருர், ரி நந்தன்

இவர்களுக்கான வகுப்புகளும் நிறுத்தப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [சா-இ]

## இவர்களுக்குச் சம்பளம், ஒய்வூதியம் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

சேவை நீடிப்பு பெற்று 4 மாதங்கள் கடமைபுரிந்த தமிழ் ஆசிரியவர்களுக்கு கடமையாற்றியகாலச் சம்பளமும், ஓய்வூதியமும் வழங்கும்படி யாழ் கல்விக் காரியாலயத்தை கல்வி அமைச்சு பணித்துள்ளதாகத் தெரிகிறது.

இவ்விடயம் தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு டி எஸ் கே வணசிங்க, பொதுச்செயலாளர் திரு த மகாலிங்கம் ஆகியோர் கல்வியமைச்சுடன் தொடர்பு கொண்டதன் பயனாகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

77-ம்-78-ம் ஆண்டுகளில் 58 வயதுக்குப்பின் சேவை நீடிப்புப்பெற்று 4 மாதங்கள் கடமை புரிந்த 52 தமிழ் ஆசிரியர்கள் இடை நிறுத்தஞ்செய்யப்பட்டதோடு சேவைக்காலத்தில் இவர்களுக்கு உரிய சம்பளமோ, இதுவரை ஒய்வூதியமோ வழங்கப்படவில்லை.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ் மாவட்டச் செயலாளர் திரு எஸ் சிவபாலலிங்கத்துடன் தொடர்பு கொண்டால் இதுவிடயமாக அவர் நடவடிக்கை எடுத்து உதவுவார் என்று மேற்படி சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார் [கா]

இன்றைய அரசியல் அமைப்பே -

## சகல நீதிமன்றங்களிலும் தமிழில் வழக்கு நடத்த உரிமை வழங்கியது

### பாராளுமன்றத்தில் நீதி அமைச்சர்

(கொழும்பு)

இன்றைய அரசாங்கத்தின் புதிய அரசியல் அமைப்பிலேயே நாடு முழுவதிலுமுள்ள எந்தவொரு நீதிமன்றத்திலும் தமிழ்மக்கள் தமிழில் வழக்குகளை நடத்தும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் கடந்த வியாழனன்று பாராளுமன்றத்தில் கூறினார்.

ஒத்திவைப்புப் பிரேரணையின் போது முன்னாள் பிரதமர் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்கா கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் திரு தேவநாயகம் மேலும் கூறியதாவது!

22-5-72- திகதி அமுலுக்கு வந்த அரசியல் அமைப்புத்திட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கில் உள்ள நீதிமன்றங்களில் மாத்திரமே தமிழில் வழக்கு நடத்தும் உரிமை இருந்துவந்தது.

7-8-78ம் ஆண்டு அமுல் செய்யப்பட்ட இன்றைய அரசின் அரசியல் அமைப்புச்சட்டம் நாடு முழுவதிலுமுள்ள நீதிமன்றங்களில் தமிழில் வழக்கு நடத்த உரிமையை வழங்கியுள்ளது. [ம-இ]

## மாவட்ட அமைச்சரிடம் தர்மர் கோரிக்கை

(கொழும்பு)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தின் கீழ் ஒரு திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டு செலவிடப்படாத நிதியை வேறு திட்டங்களுக்கு செலவிட அரசு அனுமதி வழங்கவேண்டும்.

இவ்வாறு மானிப்பாய் எம் பி திரு, வி தர்மலிங்கம் யாழ், மாவட்ட அமைச்சர் திரு, உக்கு பண்டார விஜயக்கோனிடம் கேட்டுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டத்திலேயே திரு. தர்மலிங்கம் இவ்வாறு கோரினார்.

அவர் தனது கோரிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

மானிப்பாய் தொகுதியில் பாடசாலை கட்டடங்களுக்கென சுமார் 5 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட எல்லைக்குள் இக்கட்டிட வேலைகள் நடைபெறுமெனக் கூறமுடியாது. எனவே இவ்வருட இறுதியில் செலவழிக்கப்படாமல் மீதமாக இருக்கும் பணத்தை அங்கீகரிக்கப்பட்ட மின்திட்டங்களுக்குச் செலவிடுவதற்கு மந்திரி சபையின் அனுமதியைப் பெற்றுத்தரவும்.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகள் தமது வயல்களுக்கு நீரிறைப்பதற்கும் பெரிதும் அவதிப்படுகின்றனர். இந்நிலையில் மின்

[10-ம் பக்கம் பார்க்க)

## அமிருக்கு 51 நிறைவு



(யாழ்ப்பாணம்)

எதிர்க்கட்சித் தலைவர் திரு அ அமிர்தலிங்கத்தின் 51-வது பிறந்த தினம் இன்றாகும்

இதனை ஒட்டி இன்று வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சமயநிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. [இ]

## உள்ளூர் உற்பத்தி விமானம்


[கொழும்பு]

50 ஆயிரம் ரூபா செலவில் இலங்கையில் தயாரிக்கப்பட்ட விமானம் ஒன்று அடுத்த ஆண்டு சுதந்திர தினத்தன்று சேவையில் ஈடுபடுத்தப்படும்.

இவ்விமானத்தில் இருவர்

[10-ம் பக்கம் பார்க்க]

உ



மங்கள திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

மங்களகரமான சித்தார்த்தி வருடம் ஆவணி மாதம் 11-ந் திகதி (27-8-79) திங்கட்கிழமை மு. ப. 10-00 மணிக்கு ஆஸ்பத்திரி வீதி இரண்டாவது நவீன சந்தை 141-ம் இலக்கத்தில் அமைந்திருக்கும் (சுபாஸ் கபே முன்பாக)

எமது

ஸ்ரீசாயி ஸ்ரோர்ஸ்

என்னும் ஸ்தாபனத்தை

யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர்

திரு. இராசா விசுவநாதன் ச. நீ. உ. நீ.

அவர்கள் திறந்து வைப்பார்கள்.

அத்தருணம் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவரும் வந்து விழாவை சிறப்பிக்கும் வண்ணம் பணிவன்புடன் வேண்டுகின்றோம்

ஸ்ரீசாயி ஸ்ரோர்ஸ் இங்ஙனம்
11, 12, நவீன சந்தை, யாழ்ப்பாணம் ஸ்ரீசாயி ஸ்ரோர்
தொலைபேசி: 660 (3394) உரிமையாளர்ஸ்

## திருமண அழைப்பு

மணமகன்: இ. இராசநாயகம்(கலாவதி)
மணமகள்: க. லீலாராணி

நேரம்: பகல் 11 மணி - 12-10 வரை
திகதி: 26-8-79
இடம்: மந்திகை அம்மன்கோவில் சந்நிதானம்
முக்கியகுறிப்பு! தனிப்பட்ட அழைப்புகள் இல்லை

| | |
|---|---|
| திருமதி | திருமதி |
| பா. இரத்தினசிங்கம் | கந்தசாமி |
| கலாபவனம், | பிரதான வீதி, |
| புலோலி கிழக்கு, | பருத்தித்துறை. |
| பருத்தித்துறை. | 3413 |

# அரங்கும் அவையும்

கலைப்பேரரசு ஏ.ரீ.பொன்னுத்துரை

## இன்றைய மேடையில்

நாடக உலகின் சாத்திர மான படைப்பாக இன்று இரவு 6-45க்கு யாழ் வீர சிங்கம் மண்டபத்தில் இடம் பெறவிருக்கும் நாடக அரங்கக் கல்லூரியின் 'பொறுத்தது போதும்' என்ற நாடகம், யாழ் குடாநாட்டையே பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் அமைவது ஒரு சிறப்பம்சமாகும். கரையூர், யாழ்ப்பாணம், மாதகல், வறணி, நெல்லியடி, சண்டிலிப்பாய், நாவற்குழி, நல்லூர், திருநெல்வேலி, குரும்பசிட்டி, நீர்வேலி, வசாவிளான் என பல திக்குகளிலும் அமைந்துள்ள கிராமப்பகுதிகளில் வதியும் நாடகக் கலைஞர்கள் பங்குகொள்ளும் வகையில் அமைவதால், அபார ஆற்றல்களின் சங்கமிப்பை மேடையில் இன்று காண முடியும்.

டன் பேசியும் மீனவருடன் சாடியும் மேடையை இன்று ஒரு கலக்குக் கலக்குவாரோ? சம்மாட்டிக்கு உடுக்கடிக்கும் பாத்திரம்-அதாவது மன்குடியார் பாத்திரத்தை, 'கந்தன் கருணை'யில் சூரருள் ஒருவராய் சத்தமாய் சுறுசுறுப்பாய் நடித்த பண்பான நடிகர் நாவற்குழியூர் தரைராஜா ஏற்று பக்குவமாய் நடிக்கிறார்.

ரூர். மீனவருள் ஒருவராய் மீண்டும் பாத்திரத்திலே நல்லைச் சுந்தரலிங்கம் தனித்துவ உத்தியில் தன்னை திமிர்ந்து நடிக்கிறார். மிருகங்கள் நடைகளிலே ஆட பறவைகள் குரலிலே பாட டயிலை நு வரும் சுந்தரனின் பாத்திரமும் மேடையை மெருகூட்டும் பாத்திரமே.

வேந்தும் பண்பான நடிகர்.

இன்னும் பலபேர அற்புதமாய் அளவாய் அடக்கமாய் நடிக்கின்றனர் நெல்லியடி கலைரத்தினம், மாதகல் தங்கவேல், வறணி இராசதுரை, நீர்வேலி செல்லபதி நாதன் தன்னை நடிகர்களாய் ஆளும் துடிப்பாக நடிக்கும் அடக்கப்பண்பு சேரடை கலைஞர்கள் பண்பட்ட நடிகர்களின் சங்கமமும், வழி காட்டும் மும்மணிகள்-நாடக அரங்கக் கல்லூரி கலைஞர் 'குழந்தை' ம. சண்முகலிங்கம் இசைக்குநர் அ தாசீசியஸ், மேடை நிர்வாகி மா ... ஆகி யோர் தரை முடிந்தியும் கண்ணன் குழுவின் இசையமைப்பும் இன்றைய மேடையை [வீரசிங்கம் மண்டபம்] நாடக ரசிகர்களுக்கு பூரண திருப்தியை ஊட்டியேதீருமெனத் திடமாய்க் கூறலாம்.

சமீபகால தமிழ் நாடக வளர்ச்சியை காட்டவல்ல 'பொறுத்தது போதும்' போன்ற நாடகங்களை நாம் ஒரு தடவையாவது பார்க்கத் தவறக்கூடாது. வாய்ச் சம்பிரதாயங்களை விடுத்து நமது கலை வளர்க்க, தமிழ்க்கலை வளர்க்க குறைந்தது இரண்டு ரூபாதானும் செலவிடத் தயங்கவேண்டுமா? பத்துப் படம் பார்த்தால் ஒரு ஈழத் தமிழ் நாடகமாவது பார்க்கும் பழக்கத்தை வளர்த்தால் என்ன? உண்மை சத்தியம் என்ற அடிப்படையில், வாதத்தை நோக்காக வையாத கலைஞர்களுக்கு கருவிடாது காத்திடுதல் நம் கடனல்லவோ. 'தமிழ் நாடகம் வளர விக்க' இதற்கொரு சவால் 'பொறுத்தது போதும்' நாடகம் ஒத்திகைகள் பல கண்ட என் தீர்க்கமான முடிவு இது.

## கிரான்சிசும் நவரட்ணமும்

ஆயிரம் மேடை கண்ட ஓர் அனுபவநடிகன்கரையூர் ஏ. பிரான்சிஸ் அவர்கள். ஒறியன்ரல் இளைஞர், மறுமலர்ச்சி மன்றம் போன்ற நிறுவனங்களின் கரை ஆக்கங்களுக்குஒளியூட்டிய இவர் நாடக அரங்கக் கல்லூரிப் பயிற்சியினால் தமது ஆற்றலை மெருகூட்டியுள்ளார். நாட்டுக் கூத்துக்காரனும் ஆடவல்லவர் வசனேலியின் தாசீசியஸின் நடாத்திவரும் 'நாட்டுக்கூத்தும் பாடலு' ம் ... இவர் குரல் அடிக்கடி ஒலிப்பதுண்டு சம்மாட்டி வேடத்தில் ஆடியும் பாடியும், அட்டசரசத்தியு

## தேவாவும் சுந்தரவும்

சமீபத்தில் பிரணியாய் தொழில்புரிந்த வேலையிலும், நாட்டுக்குகந்த நல்ல பல கருத்துக்களை மக்கள் மன்றிலே வழங்கவைப் பதற்கு நாடகம் போன்ற நல்ல ஒரு சாதனம் வேறில்லை என உணர்ந்து நாடகத் துறையை சிக்கெனப்பிடித்து நல்ல முறையில் பயிற்சிகள் பயின்று அரிய ஒரு நடிகரென முத்திரை குத்தி இவை ... இவருள் மாதகலூர் எஸ். தேவராஜா மீனவர் வாழ்வுக்கு விமோசனம் ... பூரட்சிப் பாத்திரத்தில புகலரிக்கும் வகையில் நடிக்க இருக்கி

## பேமினசும் ஜெயக்குமாரும்

'கோடை' நாடகத்தில் ... வேடத்தில் நடையாலேயே தனது பாத்திரத்தை உணரவைத்த பெமினஸ் சந்தோஷிக்க நாடகமேடைகள் எத்தனையோ கண்டவர். மிடுக்கான இவர் தோற்றம் கவர்ச்சிமி பிழம்பான இவரது பாத்திரத்தை மெருகூட்டி நிற்கிறது. மீனவர்கள் ஆட்டங்களில் பாடல்களின் குரல்வளம் கொடுக்கும் சண்டிலிப்பாய் ஜெயகுமார் ஒழுங்கான ஒத்திகையை இசெயலாள் வர

## சிறு தொகை பெருவெள்ளம்

தமிழ் நாடக கலையை உயர்த்திவரும் சீரிய பணியில் மூன்று நிற்கும் குணநலம் மிக்க ரூழவின்-நாடக அரங்கக் கல்லூரி-இவ்வாக்கத்தை, புலுடா முயற்சி அல்ல புனித முயற்சி, தமிழன் டசும்கூடும் முயற்சியென பாரதாலே தெரியவரும். வாய்பாடு உச்சரிப்பது போல 'தமிழ் நாடகம் வளர விக்க' என நம்மவர் நாடகங்களைப் பார்க்கா வேலேயே பேசுவதன்று; எழுதுவதன்று.

## தனிமைப் பாலம்

மௌன நதியில் என் இதயப் படகுகள் மிதந்தன.

இருளோ-நிர்வாணமாய் தன்னை விரித்து ஆட்டம் பகைச்சரிபைப் என்னில் தெளிவு;


சுழநிக் கலையாத நாயின் சங்கிதப்; தியாகம் செய்யும் எனக்குள்ளே

நடுநசி இரவே-தனிமைப் பாலத்தில் ! பேசே நாட !

—மேமன்கவி

வீடு கட்டுதல், சுவர் எழுப்புதல், தரை அமைத்தல்...

எதுவாயினும் பாவியுங்கள்



மேசன் வேலைக்கான சீமெந்து

மேசன் வேலைக்கான சீமெந்து வீட்டு நிர்மாணத்தில் ஒரு புதுமையாகும். இது சிக்கனமானது; மலிவானது. சீமெந்துக்கான அமெரிக்க தர நிர்ணயத்துக்கு இணங்கியது. போர்ட்லண்ட் சீமெந்தைப் போலவே இதனையும் பாவிக்கலாம். சீமெந்து / மணல் விகிதாசாரம் போர்ட்லண்ட் சீமெந்துக்குப் போலவேயாகும். மேசன் வேலைக்கான சீமெந்துக்கு சுண்ணாம்பு தேவையில்லை. மணல், சீமெந்து, தண்ணீர் இவை மூன்றுமே போதும், கலவை பூரணமாகிவிடும்.

மேசன் வேலைக்கான சீமெந்து கொண்டு கட்டடச் செலவைக் குறையுங்கள்;

- கொங்கிறீட் வேலைக்குப் பயன் படுத்தக்கூடாது. 50 கி. கிராம் கொண்ட ஒரு பை மேசன் வேலைக்கான சீமெந்தின் விலை
- புத்தளம் அல்லது காங்கேசன்துறைத் தொழிற்சாலையிலிருந்து ரூபா 17/90
- காலி தொழிற்சாலையிலிருந்து ரூபா 20/80.

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்

தபால் பெட்டி 1382, சுதந்திர சதுக்கம், கொழும்பு-7. தொலைபேசி: 95628, 95801-4.

# 'வாலி'
## கொலைச்சரமும் - கேள்விச்சரமும்

"அகளங்கன்" எழுதுவது

### குற்றச்சாட்டு

இராமன் வாலியைக் கொல்வதற்குக் காரணங்களாயமைந்தவை இரண்டு குற்றச்சாட்டுக்கள். ஒன்று வலிமை குறைந்த குற்றமற்றவனான சுக்கிரீவனை அடித்துத் துன்புறுத்திக் கொடுமைப்படுத்திக் கொலைசெய்ய முனைந்தது. மற்றது தம்பியின் தாரத்தைத் தாக்கிக்கொண்டது. இந்த இரு காரணங்களையே இராமன், தான் வாலியைக் கொன்றதற்குக் காரணங்களாகக் கூறுகிறான்.

தன்னோடு விற்போர் புரியாது மறைந்திருந்து அம்பெய்த இராமபிரானுடன் சொற்போர் தொடுக்கும் வாலி, நேருக்கு நேராகவே அக் குற்றங்களை தகுந்த ஆதாரங்களோடு மறுக்கிறான். அவன் மறுப்பது நியாயமானதா! அவன் காட்டும் காரணங்கள் தருமத்தின்பாற் பட்டனவா? வாலி, குற்றவாளியா? இல்லையா? என்பது பெரிய ஆராய்ச்சிக்கிடமாக இருக்கிறது.

தான் நிரபராதி என வாதிடும் வாலி, இராமன் இழைத்ததாகக் கூறும் குற்றங்களும் இரண்டே. ஒன்று குற்றமேது மற்ற தன்னைக் கொல்வதற்காய் சரந்தொடுத்தது. மற்றது போர்முறையில் அல்லாதவகையில் யுத்த தர்மத்துக்கு மாறான முறையில், மறைந்திருந்து அம்பெய்தது. வாலி எப்படித் தன்மேல் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மறுத்தானோ அதே வகையில் இராமனும் தன்மேல் சாட்டிய குற்றங்களை மறுக்கிறான்.

இராமனை அவதாரம் என்று எண்ணும் பக்திமிக்க மனிதர்கள் இராமன் குற்றவாளி என்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். வாலி குற்றமற்றவன் என்று கூறும் பகுத்தறிவுப் புத்திமிக்கவர்கள், இராமன் குற்றமற்றவன் என்பதையும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பது எனது வாதம்.

வைணவ குலத்துப் பிறந்து திருமாலுக் கேவல் செய்யும் கம்பநாடாழ்வார், இராமனின் பெருமைகளைப் பாரெல்லாம் பறைசாற்றப் பாடிய இராமாயணத்தில், இராமனின் புகழுக்குப் பங்கம் ஏற்படப் பாடியிருக்கமுடியுமா? இராமனின் சத்திய ஒழுக்கத்துக்கு இழுக்கு ஏற்படும் வகையில் கம்பர் பாடியிருக்கமாட்டார். எனவே இராமன் குற்றமற்றவன் என்பவர்களே பலர் இராமன் கூறும் கூற்றுக்களை தெய்வ வாக்காகக் கொள்ளும் மக்கள் அவையத்தினையும் இராமரின் சார்பில் கம்பர் கூறுவது என்பதை மறக்கக்கூடாது. எனவே, கம்பர் பாடியதைக் கொண்டு பகுத்துப்பார்க்கும் எம்போன்றோர், குற்றவாளி யார் என்பதை ஒருதலைப்பட்சமாக அன்றி நியாயபூர்வமாக ஆதாரபூர்வமாக ஆராய்வது அவசியமாகின்றது. இப்படி எழுதுவது கடவுட் கொள்கையோடு மாறுபட்டதாக யாரும் கருதாது, காப்பியக் கருவோடு சம்பந்தப்பட்ட பிரச்னையாக எடுப்பதையே நான் விரும்புகிறேன்.

இராமாயணத்தில் பல இடங்கள் இராமனின் பெருமைக்கு இழுக்குத்தேடும்வகையில் இன்றும் ஒரு முடிவு காணப்பெறாத சர்ச்சைக்குரிய விடயமாகவே இருப்பது யாவரும் அறிந்ததே எனினும் எமது நோக்கு வாலி வரை சம்பந்தப்பட்டது மட்டுமே எனவே ஏனைய இடங்களை தேவைக்கேற்பப் பயன்படுத்துவது அன்றி சம்பவங்களை வாசகர்களுக்கு விளக்குவது முறையாகாது.

### பிரச்னைக்குரிய விடயம்

இராமன்மேல் ஆழ்ந்த பக்தியும், மதிப்பும் கொண்டு, அவனை திருமால், பிரமா, சிவன் என்னும் மூவரின் மொத்த உருவம் என்று பூஜிக்கும் கவியிற் பெரிய, கல்வியிற் பெரிய கம்பர், காப்பியத்தில் இராமனின் புகழ்பாடவேண்டிய இடங்களில் மட்டுமன்றி ஏனைய இடங்களிலும்கூட இராமனின் புகழ்பாடிப் பரவும் பக்தரான கம்பர் வாலி வகையில், இராமனால் உலகெலாம் ஏற்றுக்கொள்ளக் கூடிய பதிலைத் தரமுடியாத கேள்விகளை வாலி வாயால் ஏன் கேட்கவைத்தார் என்பதுதான் புரியவில்லை.

வாலியின் உருவில் கேள்வி கேட்பதும் அக் கேள்விகளுக்கு இராமனின் உருவில் பதில் சொல்வதும் ஆகிய இரு தொழில்களையும் கம்பரே செய்கின்றார். இராமனாக மாறித் தான் பதில் சொல்லி இராமபிரானின் புகழை உயர்த்துவதற்கு ஏற்ற கேள்விகளை வாலி உருவில் கேட்பதன்றி உலகெலாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய பதிலைச் சொல்ல முடியாத கேள்வியை ஏன் கேட்கவைத்தார் என்பது ஆராயவேண்டியது.

தனது புலமையைக் காட்டப் புகுந்த கம்பர், இப்படியான கேள்விகளை வாலி கேட்டிருக்கலாமே என்று யாராவது குறைகூறக் கூடாதே; அது தன் புலமைக்கு இழுக்காகுமே, என்று கருதி; வாலி கேட்கக்கூடியதாக மக்கள் கருதும் அத்தனை கேள்விகளையும் கேட்க வைத்துவிட்டார் என்றே எண்ணத் தோன்றுகிறது. அதனாற்றான்போலும் பதில் சொல்லமுடியாத கேள்விகள் அவற்றுள் அடங்கின.

வால்மீகத்தில் இராமர் அம்பெய்ய வாலி மடிகிறானேயன்றி இராமனுடன் அதிகம் வாக்குவாதம் செய்யவில்லை. அப்படி இருக்க தமது தமிழ் இராமாயணத்தில் வாலி கேள்வி கேட்கும்படியும் இராமன் பதில் சொல்லும்படியும் ஏன் அமைத்தார். இப்படித் தோல்விகாணும் நோக்கம் இருந்திருந்தால் வான்மீகர் போலவே விட்டுச் சென்றிருக்கலாமே.

### இராமரில் குற்றச்சாட்டு

சுக்கிரீவனுடன் மல்யுத்தம் செய்துகொண்டிருந்த வாலியின் மார்பிலே இராமரின் அம்பு பாய அதனைக் கைகளால் இறுகப் பிடித்து, ஊடுருவிச் செல்லாதவாறு பிடித்துக்கொண்டு அதனை என்ன ஆயுதமாயிருக்குமென எண்ணமிட்ட வாலி இறுதியாக,

சரமெ னும்படி தெரிந்தது
பலபடச் சலித்தென்
உரமெ னும்பதம் முயிரோடு
முருவிய வொளிவுறச்
சரமி ரண்டினும் வாலினும்
காலினும் கழற்றிப்
பரம விளைவன் பெயரதி
வனெனப் பறிப்பான்.
[கிட்-வாலி-66]

"சரம் என்னும் வண்ணம், தனது மார்பிலே உரமுருவிய இராமபாணத்தை இரு கரங்களாலும் வாலினாலும் காலினாலும் கழற்றி, எய்தவனது பெயரை அறிவேன்" என முயலுகிறான். அந்த அம்பிலே எழுதப்பட்டிருந்த இராமனென்னும் செம்மை சேர் நாமந்தன்னைக் கண்டதும் அவனுக்கு ஆத்திரம் வருகிறது, இராமனின் முறையற்ற செயலுக்காக வெட்கப் படுகின்றான். வில்லறந்துறந்து விட்டாய் எனக் கூறுகின்ற வாலியின் முன்னே-

இறைதிறம் பினனு லென்னே
யிழிந்துளோ ரியற்கை
வெள்ளில்
முறைதிறம் பின்னு லென்று
மொழிகின்ற முகத்தான்
முன்னர்
மறைதிறம் பாத வாய்மை
மன்னர்க்கு மனுவிற்
சொல்லும்
துறைதிறம் பாமற் காக்கத்
தோன்றினன் வந்து
தோன்ற.
[கிட்-வாலி-74]

வாலியானவன் தனது கேள்விகளைத் தொடுக்கிறான், "அரக்கரோர் அழிவு செய்ய குரக்கினத்து இறைவனை ஏன் கொன்றாய். 'என்பால் எப்பிழை கண்டாயப்பா' என்று தான் குற்றமற்றவன் என்ற துணிவில் கேட்கிறான்

..........................................

ஆவியைச் சனகன்பெற்ற
அன்னத்தை அமிழ்தின்
வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத்
திகைத்தனை செய்கை
போலும்.
[கிட்-வாலி-78]

என தேவியைப் பிரிந்ததால் சித்தம் தடுமாறி நீ செய்ததே இச் செயலன்றி வேறு காரணமில்லை என வாதிடுகிறான். குற்றமில்லாத என்னையே நீ இங்ஙனம் அழித்துவிட்டு அதனால் நீயே குற்றவாளியாகிறாய், இப்படியிருக்க இராவணன் குற்றமிழைத்துவிட்டான் என்று எப்படிக் கூறப்போகின்றாய்...

..........................................

தொன்மையி னன்னூ
லெல்லாம்
இறைவனி பெண்ணைச்
செய்த தீமெதனி லிலங்கை
வேந்தன்
முறையல செய்தா னென்று
முனிதியோ
முனிவிலாதாய்!
(கிட்-வாலி-82)

என்று வாலிகேட்கும் கேள்வி அர்த்தமுள்ளதாகவே படுகின்றது. குற்றமற்றவனான வாலிக்கு வலிசெய்து குற்றவாளியாகிய இராமன் எப்படி நீதிபதியாக மாறி இராவணன் அல்லவை செய்தான் என்று கூற முடியும்?

வாலியைப் படுத்தாயலை
மன்னற
வேலியைப் படுத்தாய்
விறல்வீரனே.
(கிட் வாலி-89)

நீ வாலியைக் கொல்லவில்லை மனுதர்ம வேலியைக் கொன்றுவிட்டாய் என்று, தர்மத்தைப் போதிக்கவந்த மழைக்குன்றம் அனைய வள்ளல் இராமனுக்கு வாலி அறம் புகட்டுகின்றான்.

இவை இராமன் குற்றமற்ற தன்னைக் கொலை செய்வதற்காக கணை ஏவியதால் குற்றவாளியாகிறான் என வாலி இராமன்மேல் சாட்டும் முதலாவது குற்றச்சாட்டு.

### இராமனின் பதிலும் வாலி செய்த முதலாவது குற்றமும்

வாலி தம்பியை அடித்துத் துரத்தினான், கொடுமை செய்தான். குற்றமற்ற சுக்கிரீவனின் உயிரைக் கொல்ல வேண்டித் துன்புறுத்தினான் என்ற முதலாவது குற்றச்சாட்டுக்கு வாலியின் மாயாவிப் போரை இங்கு விளக்க வேண்டியிருக்கிறது.

மாயாவி என்பான் வாலியோடு போருக்குவர அவனோடு போர் புரிந்து அவனைக் கலைத்துச் சென்ற வாலி மாயாவி ஒரு பிலத்தினுள் இறங்கிச் செல்ல அவனோடு தானும் இறங்கி சுக்கிரீவனையும் ஏனையோரையும் அப் பிலத் துவார வழியே மாயாவி தப்பிச் செல்லாவண்ணம் காவல் வைத்துவிட்டுச் செல்கிறான் நீண்ட நாட்களாக வாலி திரும்பாததால் சுக்கிரீவனை அரசாளும்படி அவனது குலத்து ஆன்றோர் கட்டளையிடுகின்றனர்.

பிலம்புக்காய் நெடு நாள்
பெய ராயெனும்
புலம்பு நின்வழிப்
போதலுற் றுன்றனைக்
குலம்புக் கான்ற முதியர்
குறித்தொழி
அலம்பொற் றூரவ னேயர
சென்றலும்
(கிட்-வாலி-92)

என இராமன் வாலியிடம், சுக்கிரீவன் அரசாட்சி ஏற்க வேண்டிவந்த காரணத்தைக் கூறுகிறான் அரசாட்சியைச் சுக்கிரீவன் விரும்பவில்லை.

வான மாளவென் றம்முனை
வைத்தவன்
தானு மாளக் கிளையினிறத்
தடித்து
யானு மாகவ லிருந்தர
சாள்கிலேன்
ஊனமான வுரை பகர்ந்
திரேன
(கிட்-வாலி-93)

அரசாட்சியை வெறுத்து, நீ இறந்துவிட்டாய் என்று நினைந்து, உன்னைக் கொன்ற மாயாவியைக் கொன்று தானும் மாள்வேன். இருந்தரசாளேன் என்று கூறிய உன் தம்பி சுக்கிரீவனை உனது படைத்தலைவரும் முற்றுணர்ந்த முதியரும், அரசாள்க எனப் பணித்து ஆளச் செய்தார்கள். அன்றி அவன் அரசாண்டது குற்றமல்ல என இராமர் வாலிக்குக் கூறுகிறார்.

அதுவுமல்லாமல் பின்னும் நீ பிழைத்துவந்தபோது உன்னடியில் வீழ்ந்து வணங்கி மகிழ்ந்தான். தன்னை அரசாளும்படி குலம்புக் கான்ற முதியவர் பணித்துவிட்டதையும் கூறி மன்னிப்புக் கோரினான் அதனை நீ நம்பாது அவனைக் கொடுமைப்படுத்தினாய்.

வந்த நின்னை வணங்கி
மகிழ்ந்தனன்
எந்தை யெல்க வினத்தவ
ராற்றலின்
தந்த வுன்னர சென்று
தருக்கிலான்
முந்தை யுற்றது சொற்ற
முனிந்து நீ

கொல்ல லுற்றனை
யும்பியைக் கோதவற்கு
இல்லை யென்ப துணர்ந்து
மிரங்கலை
அல்லல் செய்யேல் லுனக்
கபயம் பிழை
புல்ல லென்னவும் புல்ல
பொங்கினாய்
[கிட்-வாலி 96 97

தம்பியைக் கொல்லத்துணிந்தாய் குற்றமற்றவன் என்று எண்ணி இரங்கவில்லை அல்லல் செய்யேல் உனக்கபயம் பிழை பொறுத்தருள்வாய் என்று இரங்கவும் அவனைக் கொடுமைப்படுத்தினாய் இவன் உனக்குத் தம்பியென்றும் எண்ணவில்லை. தொழு கையோடு வந்த சுக்கிரீவனை கூற்றுக்குக் கொடுப்பேனென்று கூறிக் கொல்ல முனைந்தாய்.

இவைகளே இராமன் வாலி மேல் சாட்டியது முதலாவது குற்றச்சாட்டும், வாலியைத் தான் அம்பெய்து கொல்வதற்கான முதலாவது காரணமும் ஆகும்.

### சுக்கிரீவன் குற்றமற்றவனா?

இங்கு நாம் நோக்கவேண்டியது சுக்கிரீவன் குற்றமற்றவனா என்பதே. சுக்கிரீவன் குற்றமற்றவனாக இருந்தால் குற்றமற்ற தம்பியைக் கொடுமைப்படுத்திய வாலி குற்றவாளியாவதும் தவிர்க்க முடியாதது எனவே சுக்கிரீவன் குற்றமற்றவனா என ஆராய்வது முக்கிய கடமையாகின்றது.

வாலிக்குப்பின் சுக்கிரீவன் எப்படி அரசாள்வான் வாலிக்குப்பின் சுக்கிரீவன் அரசாண்டது முறையான செயலா? சுக்கிரீவனுக்கு அரசாட்சியுரித்தானதா? என்பதை எண்ணினால் சுக்கிரீவன் வாலிக்கு ஒருதாய் வயிற்றுச் சகோதரன் மட்டுமே. பிறப்பால் சூரிய குமாரனாக சுக்கிரீவனும் இந்திரகுமாரனாக வாலியும் பிறந்தனர் என்பது இராமாயணம் கூறுகிறது. ஆனால் வாலிக்குப்பின் அரசு சுக்கிரீவனுக்கு உடைத்தாகலாம். ஆனால் வாலிக்கு ஒரு மகன் இருக்கும் பொழுது இது முறையானதா?

அங்கதன், வாலிக்கும் தாரைக்கும் மகனாகப் பிறந்தவன். அப்படியிருக்க அரசு அங்கதனுக்கன்றி சுக்கிரீவனுக்கு எப்படி உடைத்தானது? தந்தையின்பின் தனயன் அரசாள்வதன்றோ முறை. இங்கு மட்டும் ஏன் இந்த முறைமை பொய்க்க வேண்டும் அங்கதன் இளையான் என்பதாலா? அங்கதன் இளையவன் என்றால் அவனை இளவரசாகப் பட்டஞ்சூட்டி சுக்கிரீவன் அரசைப் பாதுகாத்திருக்கலாமே. அல்லது அங்கதனை அரசனாகக் கொண்டு சுக்கிரீவன் அரசாட்சியை நடத்தியிருக்கலாமே இத்தவகையில் அங்கதனுக்குரிய அரசைத் தானரசாண்டால் சுக்கிரீவன் குற்றவாளியாகின்றான்.

அங்கதன் சிறுவன் என்பதை எண்ண முடியாதபடி அடுத்த நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இராம இராவண யுத்தத்துக்குத் தூது போக அங்கதனையே தேர்ந்தெடுத்து அவனது வலிமையை

[9ம் பக்கம் பார்க்க]

## என்ன செய்தனம்?

பூ விரிந்து வண்டினுக்கு தேன் கொடுத்தது
மா கனிந்து புட்களுக்கு பழம் கொடுத்தது
ஆ பொழிந்து மானிடர்க்கு பால் கொடுத்தது
மாதுளையும் மக்களுக்காய் மணி உதிர்த்தது

வண்டில் மாடு மனிதருக்காய் ஓடித் தேய்ந்தது
தொண்டு செய்ய நாய்களுமே பிறப் பெடுத்தன
நண்டு கூட நமக்கு எல்லாம் உணவாய் ஆனது
சொண்டை நக்கி குசிப்பதற்கே ஆடு மாய்ந்தது

கனிந்த பின்பு வாழைமரம் உயிர் துறந்தது
கனி இதழ்கள் பிறருக்காக மணம் பரப்பின
மனிதன் மட்டும் மற்றவர்க்காய் என்ன செய்தனன்
கனிந்த பகை காட்டுதற்கு குண்டைக் கண்டனன்

-வடகோவை வரதராஜன்

# தசாம்ச எண் சோதிடத்தில் உங்கள் வார பலன்

(26-8-1979 முதல் 1-9-1979 வரையுமுள்ள காலபலன்.)

இப்பலன்கள் பிறந்த திகதி எண்ணைக் (அதிர்ஷ்ட எண்) கொண்டே பார்க்கவேண்டியது. ஆண்டு மாதம் திகதி மூன்றையும் கூட்டிய கூட்டெண்ணுக்கும் (விதி எண்) பொருந்தும். பெயர் எண் மற்றுமெண்களும் சரிவர அமையுமானால் இப்பலன்கள் கூடுதலாகவே நடக்கும்.

இவ்வாரத்துக்குரிய பூர்வ ஜென்மத் தொடர்பு எண்-3, விதி எண்-6, அதிர்ஷ்ட எண்-3, ஊழ் எண்-8, வினை எண்-8, நியதி எண்-1, நியம எண்-2, வாழ்வெண்-4, ஆரோக்கிய எண்-6, ஆயுள் எண்-1 ஆக அமைகின்றன.

இந்த வாரம் உலக அரங்கில் கௌரவப் பேச்சுவார்த்தைகள் கூடிய நிலையில் சில திடீர் அரசியல் மாற்றங்களும் ஏற்படலாம். சிறுச் சிறு அசம்பாவிதங்களும் ஏற்பட இடமுண்டு. செவ்வாய்க்கிழமை மக்கள் மத்தியில் கோபமும் கொதிப்பும் சண்டை சச்சரவுகளும் கூடுதலாக இருக்கும் அன்றைய தினம் நற்சுபகருமங்களை விலக்கிக்கொள்ளுதல் நன்று. புதன்கிழமை சுபகருமங்கள் செய்யலாம்.

## எண்: 1

இவர்களுக்கு இந்த வாரம் நுண்ணிய அறிவும், தீர்க்கமான யோசனைகளும் தோன்றும். அதிர்ஷ்டமான வாரம் என்றே பொதுவாகக் கூறலாம். ஓர் சகடயோக நிலை ஏற்படலாம் தொழில் துறைகளில் மதிப்புக்கிடைக்கும். அரசபோகமும் கிட்டலாம் காதலர்களுக்கு அனுகூலமான வாரம். எதிர்ப்புகள் ஏற்படினும் அதனை முறியடிப்பீர்கள், சிலருக்கு ஆடம்பர வாழ்க்கை கூடுதலாக இருக்கும். கேளிக்கை, களியாட்டங்களில் மனம் கூடிய நாட்டம் கொள்ளும்.

## எண்: 2

இவர்களுக்கு இந்த வாரம் லாப நஷ்டமென்பதில்லை சுதந்திரமே. இலட்சியமாக இருக்கும், சமயோசித புத்தியும், வேடிக்கையான பேச்சும் கூடுதலாக இருக்கும். தொழிலில் ஓரளவு முன்னேற்றம் காணப்படினும், செலவினங்களும் கூடுதலாகவேயிருக்கும் வாழ்க்கை ஏற்ற இறக்கமாகவிருக்கும் பிறநாட்டுச்செய்திகள் நன்மைதரும், குடும்பத்தில் சந்தோஷமுண்டு. உறவினர்களால் கஷ்டநஷ்டங்கள் ஏற்படலாம். கல்வித்துறையினருக்கு முன்னேற்றமுண்டு.

## எண்: 3

இவர்களுக்கு இந்த வாரம் நண்பர்களால் வாழ்க்கையில் முன்னேற்றமுண்டு, எதிர்பாராத நண்பர்களின் உதவி கிடைக்கும். சிலருக்குப் பெரிய அந்தஸ்தும், அதிகார உத்தியோகப் பதவிகளும் கிடைக்கலாம். மிகவும் முன்னேற்றமான வாரம். துணிந்து எதிலும் இறங்கலாம். இவர்கள் தங்கள் சுயமான திய எண்ணங்களை அடக்கி நடந்தால் மிகவும் முன்னேற்றமுண்டு. சிலருக்குக் குடும்பத்தில் சந்தோஷமிராது, உடல் நலம் அவ்வளவு திருப்தியாக இருக்க மாட்டாது.

## எண்: 4

இவர்களுக்கு இந்த வாரம் வஞ்சக மனிதர்களால் எதிர்பாராத மாறுதல்கள் ஏற்படலாம், மறைமுகமான எதிரிகளின் கெடுதிகளுண்டு. மனக்கவலையால் கோபக்குணம் முன்னிற்கும், எனினும் குடும்பத்தில் அன்பும் அமைதியும் நிலவும், சிலருக்குத் தொழில் முறைகளில் சிக்கல்கள் ஏற்படலாம், காதல் வயதினர்களுக்கு சந்தோஷமான களிப்புகள் ஏற்படலாம், 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு உடல்நலம் பாதிப்புறும், எதிலும் முன்யோசனையுடனும் பாதுகாப்புடனும் நடந்து கொள்ளுதல் உத்தமம்,

## எண்: 5

இவர்களுக்கு இந்த வாரம் இவர்களது நம்பிக்கையைச் சோதிப்பதுபோல் எதிர்பார்த்த ஆபத்துக்கள் நேரிடலாம். பணக்கஷ்டம் ஏற்பட இடமுண்டு குடும்ப வாழ்க்கையிலும் ஒரு குறையிருக்கும்; சிலருக்கு மகிழ்ச்சிகரமான செய்திகள் கிடைக்கலாம் சிலருக்கு மதுவிடமோ, மங்கையிடமோ மனநாட்டம் கூடுதலாக இருக்கும். செல்வாக்குள்ள நண்பர்களின் உதவியுண்டு. பிரயாணங்களும் ஏற்படலாம் பெண்கள் வழி ஆதரவு கூடுதலாக இருக்கும். சிலருக்கு உஷ்ணம் சம்பந்தமான சரும வியாதிகள் ஏற்படலாம். உடல் சுத்தத்தைப் பேணி நடக்கவும்

## எண்: 6

இவர்களுக்கு இந்த வாரம் பணத்துக்கும் பதவிக்கும் சிரமப்படவேண்டி நேரிடும். எனினும் வாரப் பிற்பகுதி முன்னேற்றமுண்டு. பிரயாசத்துக்கேற்ற ஊதியம் கிடைப்பது அரிதாகும் செலவினங்களும் கூடுதலாகவிருக்கும். சிலருக்கு நண்பர்களால் கஷ்ட நஷ்டங்கள் ஏற்படலாம் சிலருக்கு சளையாத உழைப்பால் புகழ் ஏற்படலாம். அரசியல்வாதிகளுக்குக் கூடிய சிரமமும் களைப்பும் ஏற்படலாம். அதிகமாகக் காரியங்கள் தோல்வியாகவே இருக்கும். சிலருக்கு வயிற்றுக்கோளாறும் ஏற்படலாம்.

## எண்: 7

இவர்களுக்கு இந்த வாரம் வாழ்க்கை புரட்சியாகத் தோற்றமளிக்கும் தன் அந்தஸ்துக்கு மேற்பட்டவர்களின் பாராட்டுக் கிடைக்கும், சுபகாரியம் ஒன்று நடக்கலாம். ஆண்களுக்குப் பெண்களாலும் பெண்களுக்கு ஆண்களாலும் பெருந்த உபகாரங்கள் கிடைக்கலாம். புத்திரரால் நன்மையும் சந்தோஷமும் உண்டு. பதவி மேன்மையும் புகழுமுண்டு பொலிஸ், இராணுவம் போன்ற உத்தியோகத்திலிருப்பவர்களுக்கு உயர் பதவிகள் கிட்டும்

## எண்: 8

இவர்களுக்கு இந்த வாரம் போட்டியும் பூசலும் கூடுதலாக இருக்கும் எனினும் புகழும் செல்வமும் கூடுதலாகவும் இருக்கும். வஞ்சக மனிதர்களால் சில நஷ்டங்கள் ஏற்படலாம் உத்தியோகத்தர்களுக்குப், பதவிநன்மை, மேலாட்களின்ஆதரவு கிடைக்கும் புது நண்பர்களின் கொண்டாட்டம் ஏற்படலாம் மதுப்பிரியர்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். வஞ்சகர்களின் கைவரிசை இவர்களிடமே பலிக்கக்கூடும் சிக்கல நிலை கூடுதலாகத் தோன்றும்.

## எண்: 9

இவர்களுக்கு இந்த வாரம் வாழ்க்கையில் வீண் சிக்கல்கள் ஏற்படும், சிலருக்கு மனதுக்குப் பிடிக்காத மண வாழ்க்கை ஏற்படக்கூடும் சிலருக்கு நீதிஸ்தலம் செல்ல வேண்டிய நிலையும் ஏற்படலாம் எனினும் தொழில் துறையில் முன்னேற்றமுண்டு சிலருக்குப் பெரிய அந்தஸ்து ஏற்படலாம், பிறநாட்டுப் பிரயாணங்கள் ஏற்படலாம், போக்குவரத்துச் சேவையில் உள்ளவர்களுக்கு பொர்சும உயர் பதவியும் கிடைக்க இடமுண்டு,

'வரசி'

சி. அ. செல்வத்துரை

களவடி,
ஆனைக்கோட்டை'


# சாதாரண பெயருமல்ல சாதாரண சுவையுமல்ல




**விவா** சாதாரண
மோல்டட் பாலுமல்ல

இறக்குமதியும் விநியோகமும்: db DARLEY BUTLER

MASTER


## மறந்திடப் போறேன்

மாதத்தில் உழைப்பதோ
முன்னூறு ரூபா
மதுவுக்குக் கொடுப்பதோ
நானூறு ரூபா
மீதிக்கு நான் எங்கே
களவுக்குப் போவேன்
மதுவே உன்னை நான்
மறந்திடப்போறேன்

காதலிலே தோல்வியுற்று
உன்னிடத்தில் வந்தேன்
காவாலிகள் கடைப்புலிகள்
அனைவரையும்
கண்டேன்
போதும் இனி வீட்டில்
உலைமூட்டப்போறேன்
புண்ணியனே வணக்கம்
போய்வருகின்றேன்

- செ.பாபுஜி ஜெயரட்னம்

